னால் பாதுகாத்துக்கொள்ள முடியும். எந்த நடவடிக்கையை யும் நான் எடுக்க முடியும். அதையும் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு) இது என்னுடைய பாதுகாப்புக்காக அல்ல. உங்க ளுடைய பாதுகாப்புக்காக, உங்களைக் காப்பாற்றுவதற்காக (குறுக்கீடு) உங்களுக்காக..... இவர்களுக்காக.......... (குறுக்கீடு) உங்களால் முடியாது. உங்களால் முடியாது. **அத** னால்தான் (குறுக்கீடு)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளியேறி னர்.)

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப் படங்கள் (முறைப் படுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன் றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1987) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

1. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(ஓ) சென்னைப் பெருநகர்ப்பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1987. (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறி விப்பு: 1987ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.